# ஜனாதிபதி ஆணைக்குழு அதிகாரங்கள் குறித்து விரைவில் சட்டம்

★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

மலர்: 20 ஐப்பசி 25 ஜுல்ஹஜ் 9 இதழ்: 271
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 11-11-78

SRI LANKA ... RECEIVED ... 1978 ... PERIODICALS DIVISION ... LIBRARY

## பாராளுமன்றத்தில் பிரதமர்

(கொழும்பு)

கடந்த ஆட்சிக் கால நடவடிக்கைகள் பற்றி ஆராய நியமிக்கப்பட்ட விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அதிகாரங்கள் குறித்து விரைவில் விரிவான சட்டம் இயற்றப்படும் என்று பிரதம மந்திரி திரு ஆர். பிரேமதாசா நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு எதிராக திருமதி பண்டாரநாயக்கா சமர்ப்பித்திருந்த மனுமீது மேன்முறையீட்டு நீதமன்றம் அளித்த தீர்ப்பு குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. பிரேமதாசா இதுகுறித்து மேலும் கூறியதாவது:

விசேட ஜனாதிபதி ஆணைக்குழு சட்டம் முன்னர் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டபோது, ஆணைக்குழுவின் அதிகாரங்கள் பின்னர் தெரிவிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

1978-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10-ம் திகதிக்கு முன்னர் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து விசாரணை செய்வதற்கான விதிகள் ஏற்பாடு செய்யப்படவில்லை என்பது உண்மைதான். ஆனால் சட்டம் இயற்றிய இந்த ஆணைக்குழு எந்த நடவடிக்கைகள் குறித்து விசாரணை செய்யும் என்று சகலருக்கும் விளங்கி

(6-ம் பக்கம் பார்க்க)

---

ஜனாதிபதி ஆணைக்குழு தடைஉத்தரவு:

# சட்டமா அதிபர் சிவா பசுபதியின் மனு நிராகரிப்பு; அப்பீலுக்கு அனுமதி

(கொழும்பு)

**முன்னாள் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் மனுமீது விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகளுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் விதித்திருந்த தடை உத்தரவை நிறுத்தி வைக்குமாறு சட்டமா அதிபர் சமர்ப்பித்திருந்த மனுவை நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்தது.**

**இதே வேளையில் திருமதி பண்டாரநாயக்காவை விசாரணை செய்வதற்கு விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு அதிகாரமில்லை என்று இம்மேன்முறையீட்டு நீதிமன்றம் அளித்ததீர்ப்புக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில், அப்பீல் செய்வதற்கு இதே நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.**

மேன்முறையீட்டு நீதியரசர்கள் திருவாளர்கள் டி. விமலரத்ன (தலைவர்), எஸ் வைத்திலிங்கம், பேர்ஸி கொலின் தோமி ஆகியோர் சட்டமா அதிபர் திரு. சிவா பசுபதியின் இரு மனுக்கள்மீதும் நேற்று தீர்ப்பு வழங்கினா,

விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகளைத் தடை செய்யுமாறு விதிக்கப்பட்ட உத்தரவை நிறுத்தி வைக்குமாறும் உயர் நீதிமன்றத்திற்கு இத்தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்ய அனுமதிக்குமாறும் சட்டமா அதிபர் தமது விண்ணப்பத்தில் கோரியிருந்தார்

விசேட ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடையுத்தரவை நிறுத்தி வைக்குமாறு விடுத்த கோரிக்கையை ஏற்க மறுத்த மேன் முறையீட்டு நீதிமன்றம் இத்தீர்ப்பை எதிர்த்து உயர் நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்ய அனுமதி வழங்கியது.

இவ்விவகாரத்தில் அடிப்படை சட்டப் பிரச்னை உண்டு என்று குறிப்பிட்ட மேன்முறையீட்டு நீதிமன்றம் விசேட ஜனாதிபதி ஆணைக்குழு உறுப்பினர்கள் மூவருக்கும் எவ்வித இழப்பும் ஏற்படாது என்றும் தெரிவித்தது.

இதே வேளையில் ஜனாதிபதி ஆணைக்குழு நேற்று வழமை போல் கூடுமென அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும் நேற்றுக் காலை கூடவில்லை. (உ-இ)

---

ஃ ஆள் மாருட்டம் ஃ நிதி ஊழல்

## இந்திராவுக்கு எதிராக தேர்தல் ஆட்சேபனை மனு?

புதுடில்லி, நவ. 10

சிக்மகளூர் தொகுதியிலிருந்து இந்திய லோகசபைக்குத் தெரிவு செய்யப்பட்ட திருமதி இந்திரா காந்திக்கு எதிராக குறிப்பிட்ட இடைத் தேர்தலில் ஆள் மாருட்டம், நிதி ஊழல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக தேர்தல் ஆட்சேபனை வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட உள்ளது.

இத்தகவலை மத்திய தொழில் அமைச்சர் திரு. ஜோர்ஜ் பெர்னண்டஸ் தெரிவித்தார்.

இடைத் தேர்தலின்போது தமிழ் நாட்டிலிருந்து வாக்காளர்கள் வரவழைக்கப்பட்டு வாக்களிப்பின்போது இந்திராவுக்கு ஆதரவாக ஆள் மாருட்

(6-ம பக்கம் பார்க்க)

---

## 4 லட்சம் இளைஞர்களுக்கு ரூ. 50 படி

(கொழும்பு)

தற்போது நாட்டில் வேலையற்றிருக்கும் 4 லட்சம் இளைஞர்கள் 50 ரூபா ஆதாரப்படியைப் பெற்று வருகிறார்கள் என்றும் இதற்கு அரசு 12 கோடியே 80 லட்சம் ரூபாவைச் செலவிடுகிறது என்றும் பிரதம மந்திரி ஆர். பிரேமதாசா நேற்று பாராளுமன்றத்தில் கூறினர். (இ)

---

## வருந்துகின்றேம்

மின்சாரத்தடை காரணமாக 'ஈழநாடு' நேற்று தாமதமாகவே வெளிவந்தது. உங்களுக்கு ஏற்பட்ட இந்த அசௌகரியத்துக்காக வருந்துகின்றேம்.

-நிர்வாகி

---

## தந்தியின் நத்தைவேகம்

(சங்கானை)

சங்கானையிலிருந்து தாவடிக்கு அனுப்பிய அவசரத் தந்தி ஒன்று 25 நாட்கள் கடந்தும் இதுவரை உரியவருக்குப் போய்ச் சேரவில்லையாம்.

கடந்த மாதம் 16-ம் திகதி (16-10-78) சங்கானையிலிருக்கும் திருமதி குண

(6-ம் பக்கம் பார்க்க)

---

# ஜீப்பை மறித்து ரூ. 29,000 துப்பாக்கிமுனையில் கொள்ளை

## மாங்குளத்தில் திகில் சம்பவம்

(மாங்குளம்)

மாங்குளம் - வவுனிக்குளம் வீதியில் நீர்ப்பாசன இலாகா ஜீப் ஒன்று துப்பாக்கிமுனையில் மறிக்கப்பட்டு 29,337 ரூபா பணம் கொள்ளையடிக்கப்பட்ட திகில் சம்பவம் ஒன்று நேற்று நடைபெற்றுள்ளது.

நேற்றுப்பகல் நீர்ப்பாசன இலாகா உதவிப் பொறியியலாளர் திரு. நவரத்தினம் ஜீப்பில் மேற்படி பணத்துடன் சென்று கொண்டிருந்தபோது மூன்று இளைஞர்கள் துப்பாக்கி முனையில் ஜீப்பை நிறுத்தி பணத்தைக்கொள்ளையடித்துக் கொண்டு மறைந்தனராம்.

பணத்துடன் செல்கையில் இவர்கள் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தபடி காட்டுக்குள் தப்பி மறைந்ததாகத் தெரிய

[6-ம பக்கம் பார்க்க]

---

நீதிமன்ற துப்பாக்கி கொள்ளை

# தலா 1000 ரூபா பிணையில் மேலும் 2 இளைஞர்விடுதலை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நீதிமன்றத் துப்பாக்கிக் கொள்ளை வழக்கில் றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த 6 இளைஞர்களில் இருவர் நேற்று 1,000 ரூபா உறுதிப்பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

சாவகச்சேரி நீதிமன்றத்தில் நீதவான்ஜவன்பெர்ணண்டோ முன்னிலையில் சந்தேகநபர்களான 6 இளைஞர்கள் ஆஜர் செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணிகளான ஜி. ஜி. பொன்னம்பலம், ஆர். ஈ தம்பிரத்தினம், எஸ் பி. மயில்வாகனம், வி. பி. கார்த்திகேசு, எஸ். பாலசுப்பிரமணியம், எஸ். சுரேந்திரன், வி. அம்பலவாணர், வி செல்லத்துரை ஆகியோர் ஆஜரானர்கள்.

சட்டத்தரணி ஜி ஜி பொன்னம்பலம், இளைஞர்களைப் பிணையில் விடுமாறு கோரினர்.

சந்தேகநபரான ராசரத்தினத்தின் 77ம் ஆண்டு

(6ம் பக்கம் பார்க்க]

---

## பணம்பொருள் அபிவிருத்தி சபை இன்று திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். விடமைப்புத் திணைக்கள கட்டிடத்தில் அமைந்துள்ள பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் தலைமை அலுவலகத்தை இன்று காலை 9 மணிக்கு, பெருந் தோட்டத்தைத் தொழில் அமைச்சர் திரு- எம் டி எச் ஜெயவர்த்தன திறந்துவைக்கின்ருர்.

### நிகழ்ச்சிகள்

காலை 11 மணிக்கு பனம் பொருள் அபிவிருத்தி சம்பந்தமான ஆலோசனை மகாநாடொன்று யாழ். அரசாங்க செயலகத்தில் நடைபெறும். இதில் யாழ்ப்பாண மாவட்ட எம். பிக்கள் கலந்துகொள்வார்கள். பிற்பகல் 2 மணிக்கு ஒட்டுமடத்திலுள்ள பனங்கட்டித் தொழிற்சாலையை அமைச்சர் பார்வையிடுவார். இதன் பின்னர் சங்கானையில், போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலைக்கு அமைச்சர் விஜயஞ் செய்வார்.

இன்று மாலையே அமைச்சர் ரயிலில் கொழும்பு திரும்புகிருர்

(பனம் பொருள் அபிவிருத்திச்சபை திறப்புவிழா பற்றிய சிறப்புக் கட்டுரைகள் 2ம். 3ம பக்கத்தில் வெளியாகியுள்ளன )

# பனம்பொருள் அபிவிருத்திசபை

## பெருந்தோட்டத் தொழில் அமைச்சர் செய்தி

சிங்களமக்கள் தென்னை மரத்தைச் கல்ப விருக்ஷம், அதாவது விரும்பியதை அளிக்கும் மரம் என அழைப்பர். அதேபோன்று வட பகுதி மக்கள் பனை மரத்தைக் கற்பகதரு என அழைப்பர். கற்பகதரு என்றால் சகலதையும் அளிக்கும் மரம் எனப் பொருள்படும். பனந்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு இதுவரைதீவிர முயற்சியெதுவும் மேற்கொள்ளப்படாதது பெரும் அபாக்கியமாகும். யாழ்ப்பாணப் பிரதேசத்தில் மட்டும் 80 இலட்சத்திற்கும் அதிகமான பனை மரங்கள் உள்ளன. ஆனால் இவற்றைப் பயன்படுத்துவதுமிக மிகக் குறைவாகவுள்ளது. ஓராண்டின்போது பனை மரங்களின் மொத்த எண்ணிக்கையில் 1.5 வீதம் மட்டுமே பயன்படுத்தப்படாமலுள்ள பனந்தொழில் வளத்தை எடுத்துக் காட்டுவதாக உள்ளது

பனந்தொழிலை விருத்தி செய்வதால் பல நன்மைகள் விளையும். பனங்கருப்பநீரைச் சீனியாகவோ பனங்கட்டியாகவோ மாற்றுவதனால் சீனியின் இறக்குமதி குறைவடைவதுடன் சீனியை இறக்குமதி செய்வதற்கு ஆண்டுதோறும் எம் நாடு செலவிடும் பல இலட்சம் ரூபாவும் மிச்சமாகும். பனையின் துணைப்பொருள்களிலிருந்து செய்யப்படும் கடகம் மற்றும் கூடைவகைகளுக்கும் பனந்தும்புக்கும் உள்நாட்டுச் சந்தையிலும் நல்ல கிராக்கியுள்ளது. தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னர் பனந்தும்பை இலங்கை ஏற்றுமதி செய்துள்ளதென்பதையும் அவ்வாறு பனந்தும்பு ஏற்றுமதி செய்த முதல்நாடு இலங்கைதான் என்பதையும் வெகுசிலரே அறிவர். பனை மரம் மருந்தாகவும் வெட்டு மரமாகவும் பயன் தரும் சிறப்பு வாய்ந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக இத்தொழிலை மறு சீரமைப்புச் செய்வதனால் கூடிய வருமானமும் அதிக வருமானமும் அதிக தொழில்வாய்ப்பும் கிட்டும்.

இவ்வளங்களை திரட்டிப் பயன்படுத்தும் பொருட்டே பனை அபிவிருத்திச் சபையொன்று நிறுவப்பட வேண்டுமென்று இவ்வரசாங்கம் முடிவு செய்தது. பனந்தொழில் பற்றி நன்கு பரிச்சயமும் அறிவுமுடையவர்களையே குறித்த சபையின் உறுப்பினர்களாக நாங்கள் நியமித்துள்ளோம். மேலும் இச்சபையின் தலைமையகத்தை அது அமைக்கப்பட்டதற்குச் சாலவுந் தகவுடைய யாழ்ப்பாணத்தில் நாங்கள் நிறுவியுள்ளோம். கொழும்புக்கு வெளியே யாக்கமொன்றின் தலைமையகம் நிறுவப்படுவது யாக்கங்களின் வரலாற்றில் இதுவே முதற்றடவையாகும்.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பனை அபிவிருத்திச் சபையின் பணி அளவிற்பாரியதாகும். தற்போதுள்ளதும் பெரிதும் பயன்படுத்தப்படாததுமான பனை வளத்தைப் பயன்படுத்துவதற்கு அவர்கள் முன்னுரிமை கொடுக்க வேண்டியுள்ளது மட்டுமல்லாமல் இத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு நீண்டகால அபிவிருத்தித் திட்டமொன்றைத் தொடங்குவதற்கும் அவர்கள் நடவடிக்கையெடுக்க வேண்டியுமுள்ளது. அத்துடன் எதிர்காலத்தில் பனை ஆராய்ச்சி நிறுவகம் ஒன்றை அமைக்கும் தேவையும் எழலாம். பனையைப்பயிரிட்டு, வளர்ப்பதனை ஊக்குவிக்கும் பொருட்டு உதவிப்பணம் வழங்கும் திட்டமொன்றை ஏற்படுத்தவேண்டிய அவசியமும் ஏற்படலாம்.

பனை அபிவிருத்திச் சபையை நிறுவியதன் மூலம் இத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்குவேண்டிய முதல் நடவடிக்கையை நாங்கள் மேற்கொண்டுள்ளோம். இச்சபையின் தலைமையகத்தைத் திறந்து வைக்கும் இச்சந்தர்ப்பத்தில் இத்தொழில் வெற்றி பெறுவதற்கும் செழிப்பாக வளர்வதற்கும் எனது உளங்கனிந்த நல்லாசிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எம். டி. எச். ஜயவர்த்தன
(பெருந்தோட்டத் தொழில் அமைச்சரின் செய்தி)

## பனை பஞ்சம் தாங்கும்

கௌரவ பெருந்தோட்டத் தொழில் அமைச்சர் திரு. எம். டீ. எச். ஜயவர்த்தன அவர்கள், இன்று யாழ்பாணத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் தலைமைக் காரியாலயத்தைத் திறந்து வைப்பதையிட்டு ஒவ்வொரு தமிழரும் பூரிப்படைவர். இன்றுவரை வடமாகாணத்தில் அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் ஒன்றுவது, தமது தலைமைக் காரியாலயத்தை அமைக்கவில்லை. வடமாகாணத்தில் முதன்முதலாக அமையும் அரசாங்கக் கூட்டுத்தாபனம், பனம்பொருள் அபிவிருத்திச்சபையே. வடமாகாணத்தில் இந்தக் கூட்டுத்தாபனத்தை அமைக்க ஆவன செய்த இந்த அரசாங்கத்தைப் பாராட்டாமல் இருக்க முடியாது.



பாடியிருக்கின்றார்கள். தமிழ் பேசும் மக்களின் கிராமப்புறப் பொருளாதார வளர்ச்சி பெரும்பாலும் பனையின் உபயோகத்திலேயே தங்கியுள்ளது என்பதை நாம் உணரவேண்டும். குறைந்த மூலதனத்தில் நிறைந்த பயனைத் தரக்கூடிய பனையின் முக்கியத்துவத்தைத் தமிழ்மக்கள் யாவரும் இப்போது உணரத் தொடங்கி விட்டார்கள். நமது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பப் பனையே சிறந்த முதற் கருவியாகும். பனம்பழம், பனாட்டு, ஜாம், சீனி, பனங்கட்டி, கிழங்கு, ஒடியல், வெல்லம், கல்லாக்காரம், பதநீர், கள்ளு ஆகிய சத்துள்ள உணவுகளைப் பனை தருகின்றது. கடகம், பெட்டி, கைக்கூடைகள், பாய், சுளகு, தொப்பி போன்ற பன்ன வேலைப் பொருட்களை நவீன முறையில் சிறு குடிசைக்கைத் தொழிலாகச் செய்து, சந்தைப்படுத்திப் பெரும்பொருள் சம்பாதிக்கப் பனம்பொருள் அபிவிருத்திச்சபை சகல மக்களுக்கும் வேண்டிய உதவிகளைச் செய்துகொடுக்க இருக்கின்றது

பனை, பணத்தைச் சம்பாதித்துத் தருவதைத் தவிர, நிலத்தையும் பாதுகாப்பதற்குச் சிறந்த காவலனாகும். இயற்கை வளங்களைக் கட்டிக்காக்கக் கூடியவரையில் பனைகளை நாட்டி, நமக்கு உதவிசெய்யும்படி வேண்டுகின்றோம்.

பனம்பொருள் அபிவிருத்திச் சபை மூலம் நம்முடைய சுய தேவைகள் பலவற்றைப் பூர்த்திசெய்து, தமது பொருளாதார விருத்திக்கு அடிக்கல் நாட்ட, இந்தச் சந்தர்ப்பத்தைத் தமிழ்பேசும் மக்கள் நழுவவிடக்கூடாது. புதிதாக அமைக்கப்பட்ட இப்பனம்பொருள் அபிவிருத்திச்சபையின் இயக்குநர்கள் செய்ய வேண்டிய தொண்டும், சேவையும் மிகப் பெரியது. இலங்கையிலுள்ள பயன்படுத்தப்படாத 6 கோடி பனைகளையும் பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுத்துவது அவர்களின் தலையாய கடமையாகும். பனம்பொருள் தொழிலை அபிவிருத்திசெய்து, வேலையற்ற இளைஞர்களுக்குப் பெரும் வேலைவாய்ப்பை ஏற்படுத்தித்தருவது மிக முக்கியமானதாகும். ஈழத்திருநாட்டை வளம்பெறச் செய்து, பொருளாதாரத்தில் தன்னிறைவு காணப் பனம்பொருள் அபிவிருத்திச் சபை ஆக்கவிருக்கும் பணிகளுக்கு ஊக்கமும், உதவியும் புரியும்படி சகல மக்களையும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

என். கனகசூரியர் ஏ. எம். ஐ. ஏ. ஈ.
(முகாமை இயக்குநர்)

பனம்பொருள் அபிவிருத்திச் சபை, 1978ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18ஆம் திகதியின், 33ஆம் இலக்க இலங்கை வர்த்தமானியின் மூலம் ஆக்கப்பட்டது. இலங்கை முழுவதுமுள்ள 11 கோடி பனை மரங்களை மனிதத் தேவைக்கு உபயோகிப்பதே இந்தச் சபையின் முக்கிய நோக்கமாகும். கடந்த ஏறக்குறைய 200 ஆண்டுகளாகப் பனம்பொருள் உற்பத்தி குன்றி இருந்தது. பனம்பொருள் பாவனை நவீன பொருட் பாவனைகளால் தோற்கடிக்கப்பட்டு வந்தது. 1970ஆம் ஆண்டு தொடக்கம் பனம்பொருள் அபிவிருத்தியைப் பற்றிய நாட்டம் நம்மிடையே உதயசூரியனைத் தோன்றியது. பனம்பொருள் அவிருத்தியை மேற்கொண்டு தமிழ்மக்களின் பொருளாதார வளர்ச்சியைக் கட்டியெழுப்பப் பனம்பொருள் அபிவிருத்தச் சபை கிராமிய மட்டத்தில் சகல உதவிகளையும் செய்யக் காத்திருக்கின்றது.

பனையின் உபயோகங்களைப் பழங்கால இலக்கியங்களில் இருந்து அறியலாம். பனைக்குக் 'கற்பகதரு' என்ற பெயர் உண்டு. கேட்டதெல்லாம் கொடுப்பதினால் பனைக்குக் கற்பகதரு என்று பழந்தமிழர் பெயரிட்டிருக்கலாம்.

''பஞ்சம் தாங்கும் பனம்
பொருட் செல்வம்
நெஞ்சத் தினிக்கும் நேர்
நிகர் கற்பகம்''—

என்றும்,

''தேம்படு பனையின் திரள்
கனிச் செல்வம்
நாம்படும் பசிப்பிணி நனி
மிகப் போக்கும்.''

என்றும் பனையின் பயன்களைப்

### பயன் பல...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வத்துடன் பங்குபற்றினால் தான் அவர்கள் வதியும் பகுதியின் பொருளாதார அபிவிருத்தி துரிதமடையும். வடக்குக் கிழக்குப் பகுதியிலேயே முழு மூலப்பொருட்களும் கிடைக்கத்தக்கதாகவுள்ள பொருளாதார அபிவிருத்தித்துறை இதுவேயாகும். வடக்கு கிழக்கு மாகாணங்களின் பொருளாதார அபிவிருத்திக்காக பனம்பொருள் அபிவிருத்திச்சபை முழு மூச்சுடன் உழைக்கும்.

காலகதியில் பனைமரம் நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் பரவிவிடும்.

இந்த பொருளாதார அபிவிருத்திப் பிரச்சனையுடன் ஒரு பெரும் சமூகப் பிரச்னை பிணைந்துள்ளது. இச்சபையின் செயற்பாட்டின் மூலமாக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க எண்ணப்பட்டுள்ளது. எதிர்வரும் ஆண்டில் ஐயாயிரம் பேருக்கு வேலைவாய்ப்பளிக்கும் விதத்தில் திட்டங்களைச் செயல்படுத்த எண்ணப்பட்டுள்ளது. எமது சமுதாயத்தின் பயன்மிகுந்த ஒருபிரிவினர் அனுபவிக்கும் சமூகக் குறைபாடுகளை குறைக்க இத்திட்டங்கள் பெருமளவு குறைக்கும்.

## ஒரு பொற்காலம் பிறந்திருக்கிறது

கற்பகதரு என்று ஆன்றோரால் அழைக்கப்பட்ட பனையின் பிரயோசனத்தை இன்று நாம் பல்வேறு வகைகளில் பெறமுனைகிறோம்; பெறுகிறோம். விஞ்ஞானம் முதிர்ச்சியுற்றிருக்கும் இந்நாளிலே பல் வகையிலும் பனம்பொருள் அபிவிருத்தியடைய வாய்ப்பு உண்டெனலாம். வடக்கில் பெருமளவு காணப்படும் கற்பகதருக்கள் தங்கள்முழுப் பயனையும் கொடுக்க பொற்காலமொன்றுபிறந்திருக்கிறது. அதனால் நாடும் நாமும் நன்மையடையலாம். சமுதாய ஏற்றத்தாழ்வு தொழில்வளம் பெறுதலால் அருகிச் சமத்துவ நிலைக்கு விஞ்ஞான ரீதியிலான தொழில்வாய்ப்பு நம்மை அழைத்துச்செல்லும். நாம் காணத்துடிக்கும் விஞ்ஞான சோஷலிஷத்திற்கு வித்திடவும் இச்சபை தன்னலான பங்கினை ஆக்சபூர்வமாகச் செய்யும் என்பதைக் கூறிக்கொள்வதில் பெருமையடைகிறேன்.

எஸ். வேலாயுதன்

பல்லாயிரக்கணக்கான பனை மரங்கள் யாவும் தக்கமுறையில் பயன்படுத்தப்படுவதில்லை. அவற்றின் பயனைப்பெறுவதற்கு முனைந்வநிற்கும் இவ்வேளையில் எவ்வெவ்வகையில் சபை அப்பயன்களை அடைய

(5-ம் பக்கம் பார்க்க)


எமது வாழ்த்துக்கள்!

மணியம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்

16, மக்கள் நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7545

கிளை: மணியம் ஸ்ரோர்
15, புபிலி பஜார், யாழ்ப்பாணம்

# இன்று திறப்பு விழா

## பயன் பல தரும் பனைமரம்

### பொருளாதார அபிவிருத்தித் துறையில் இன்று ஒரு முக்கிய நாள்

பொருளாதார அபிவிருத்தித்துறையில், இன்று மிகவும்முக்கியத்துவம்வாய்ந்த நாளாகும். பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் தலைமையகத்தைத் திறந்து வைக்கும் இவ்விசேட வைபவத்தின்போது, இச்சபை நிறுவப்படுவதற்கு முன்னேடியாகவிருந்து உழைத்த பலரை நாம் நன்றியுடன் நினைவுகூருதல்வேண்டும்.

அபிவிருத்திக் கைத்தொழிலுக்கு நியதிச்சட்டமுறையான சபையொன்று இருக்க வேண்டியதன் அவசியம் வலியுறுத்திக்கூறப்படாமலே புலனாகும். பனை அபிவிருத்திச் சபை நிறுவப்பட்டிருப்பது, பனங் கைத்தொழிலைத்திட்டமிட்டு அபிவிருத்தி செய்வதற்கும் பனை மரங்களை முற்று முழுதாகப் பயன்படுத்துவதற்கும் பெரிதும் உதவும்.

பனை மரத்தின் வளங்கள் அளப்பரியவை பனை மரத்திலிருந்து கிடைக்கப்பெறும் கிழங்கு, ஓலை, பழம் ஆகிய யாவும் பயன்படுத்தப்படலாம். இத்தகைய பயன்பாட்டினையுடைய மரம் வேறெதுவும் இல்லையென்றே சொல்லலாம் நல்ல அழகும் பயனுமுடைய கைப்பனிப் பொருட்கள், சுவைமிக்க நுங்கு, கருப்பநீரிலிருந்து கிடைக்கும் புத்துணர்ச்சியூட்டும் குளிர் பானம், ஊட்டமும் மருத்துவச் சக்தியுமுடைய கள், வெளிநாட்டுச் செலவாணி கிடைக்கவழி செய்யும் ஏற்றுமதிப் பொருளாகிய பனந்தும்பு என்பன பனையிலிருந்து எமக்குக்கிடைக்கும் சில நற்பயன்களாகும்.

பனை மரத்தைப் பயன்படுத்தக்கூடிய புதிய வழிகள் பற்றி ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படவேண்டியுள்ளன. இத்தகைய ஆராய்ச்சிகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பனங் கைத்தொழிலானது பல பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளது. எவ்வித கட்டுப்பாடுமின்றி பனைமரங்கள் தறிக்கப்படுகின்றன. இது மிகவும் வருந்தத்திற்குரிய விடயமாகும். இவ்வாறு மனம்போன போக்கில் பனைமரங்கள் தறிக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்படவேண்டும். ஒரு பனையை முற்றுமுழுதாகப் பயன்படுத்த வேண்டுமாயின் அது ஏறக்குறைய 60, 70 ஆண்டுகள் முதிர்ச்சி உடைய மரமாக இருத்தல் வேண்டும் வீடுகள் கட்டும் நோக்கத்திற்காகப் பனை மரங்களை எதேச்சையாகத் தறித்து வீழ்த்துகின்றனர். பனை மரங்களை மீள நடப்படுவதில்லை. இந்நிலைமை நீடிப்பின் மிகச் சொற்பமான பனைகளே எஞ்சியிருக்கும். பனையை மீள நடுவதும், வேறு பயிர்கள் உண்டாக்கப்படமுடியாத காணிகளில் பனந்தோப்புக்களை உண்டாக்குவதும் மிக அவசியமானதாகும். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பனை மரங்கள் இல்லாதிருக்கின்றமை அப்பகுதிகளின் மழை வீழ்ச்சியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

பனை ஓலையிலிருந்து பல்வேறு கைப்பணிப் பொருட்களைச் செய்து கொள்ளலாம். ஒருகாலத்தில் பாரிய அளவில் மேற்கொள்ளப்பட்டு வந்த இக்கைத்தொழில் இன்று ஒருகாலத்தில் மிகச் செழிப்புடனிருந்த இக்கைத்தொழில் இன்று அந்நிலையில் இல்லை. மரபுவழிக் கைப்பணியாளர்கள் தரகர்களினால் சுறண்டப்பட்டுவருகின்றனர். கைப்பணியாளர்களும் இக்கைப்பணிப் பொருட்களுக்குப் பெயர்போன கிராமங்களும் இக்கலையைக் கைவிட்டுவிட்டன. இப்பொருட்களின் தரமும் அழகும் வெளிநாட்டிலுள்ளவர்களின் கலா ரசனையைத் திருப்திசெய்யக் கூடியவையாகும். ஏற்றுமதிசெய்யும் நோக்கத்துடன், இப்பொருட்களைத் தயாரிப்பதற்கு ஆட்களைப் பயிற்றும் பயிற்சித்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது பயிற்சிபெறுநர்கள் உற்பத்திசெய்யும் இப்பொருட்களை இச்சபை கொள்வனவு செய்து சந்தைப்படுத்தும்.

குளிர்பாணம் தயாரிக்கப்படுவதற்கு பனங்கருப்பநீர் பயன்படுத்தப்படும். இப் பானம் சுவை மிகுந்ததாக இருக்குமென்பதுடன் மலிவானதாகவுமிருக்கும். இதுகாற்றுடன் அடைக்கப்பட்டபனங்களுக்குப்பதிலாக மகிழ்ச்சியுடன் அருந்தக்கூடிய மாற்றுப் பானமாகும். கள்ளை விரும்புவோர்கட்காக போத்தலில் கள்ளை அடைத்து வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. கருப்பநீரிலிருந்து பனங்கட்டி, சீனி, பாணி போன்ற ஏனைய பண்டங்களையும் தயாரித்துக்கொள்ளலாம்.

சுவைமிக்க நுங்கு, பனாட்டு ஆகியன நல்ல உணவுப் பொருட்களாகும். பனம் பழத்தின் சாற்றிலிருந்து குளிர் பானங்கள், பழரசம், ஜாம் முதலியன தயாரிக்கலாம். பழத்தின் தும்பிலிருந்து கம்பளம், தரைவிரிப்புகள் என்பவற்றைச் செய்துகொள்ளலாம் பனந்தும்பிற்கு உலகச்சந்தையில் நல்லவிலை இருக்கின்றது. இத்தும்பு இதுகாலவரை நல்ல முறையில் பயன்படுத்தப்படவில்லை பனம்பொருள் அபிவிருத்திச்சபை முன்னுரிமை கொடுத்து அபிவிருத்தி செய்யவுள்ள பொருட்களில் மேற்கூறப்பட்டவை சிலவாகும்.

பனம்பொருள் அபிவிருத்திச்சபை நிறுவப்பட்டிருப்பது அதுவும் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டிருப்பது பனங்கைத்தொழில் அபிவிருத்தியில் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொள்வதற்கு வடக்குகிழக்கு மாகாணத்திலுள்ள மக்களுக்கு நல்ல வாய்ப்பினை அளித்துள்ளது. மக்கள் ஆர்

**-- கே. சி. நித்தியானந்தா --**
(தலைவர் - பனம் பொருள் அபிவிருத்திச்சபை)

(2-ம் பக்கம் பார்க்க)

பனம்பொருள்
அபிவிருத்திச் சபைக்கு

எமது
வாழ்த்துக்கள்!

சி. சின்னத்துரை அன் பிறதர்,
யாழ்ப்பாணம். - தொலைபேசி: 284.

## பெருந்தோட்ட தொழில் அமைச்சு
## செயலாளர்செய்தி

கடந்த வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது பெருந்தோட்டத் தொழில் அமைச்சர் மாண்புமிகு எம். டி. எச். ஜயவர்த்தன அவர்கள் உரையாற்றுகையில் பனை அபிவிருத்திச் சபையொன்றை நிறுவுவதற்குத் தான் விரைவில் நடவடிக்கை எடுப்பாரென நாடாளுமன்றத்துக்கும் இந்நாட்டுப் பொதுமக்களுக்கும் உறுதியளித்திருந்தார். அதற்கிணங்க, இவ்வாண்டு ஜூன் மாதத்தில் பனை அபிவிருத்திச்சபை நிறுவப்பட்டது. அதன் தலைமையகம் திறந்து வைக்கப்படும் இச்சந்தர்ப்பத்தில் பனந்தொழிலின் அபிவிருத்திக்குப் பொறுப்பாக விளங்கும் அமைச்சின் செயலாளர் என்ற வகையில் இந்நல்லாசிச் செய்தியை வழங்கும் பாக்கியம் எனக்குக் கிட்டியுள்ளது.

பெருந்தோட்டப் பயிர்களை அபிவிருத்தி செய்யும் பணியின் அதிமுக்கிய பொறுப்பு பெருந்தோட்டத்தொழில் அமைச்சைச் சார்ந்ததாகும். இந்நாட்டின் வட, கீழ்ப் பகுதிகளில் பெருமளவில் வளர்க்கப்படும் தாருப் பயிராகிய பனை, இவ்வமைச்சின் நோக்கெல்லையினுள் அடங்கும் பயிர் பகுதிகளைச் சார்ந்திருப்பது இயற்கையே. இருப்பினும், வர்த்தக ரீதியில் பல வழிகளில் பயனளிக்கக்கூடியதாகவிளங்கும். இப்பயிரானது அபிவிருத்தி செய்வதற்கு உகந்ததெனப் பல்லாண்டுகளாகக் கருதப்படவில்லை. பனை அபிவிருத்திச்சபை நிறுவப்பட்டதனையடுத்து, பனையைப் பயிரிட்டு வளர்ப்பதிலிருந்து அதன் விளைபொருள்களைச் சந்தைப்படுத்துவது வரை சகல துறைகளிலும், இத்தொழிலுக்கு உதவியும் ஊக்கமும் அளிக்கும் வாய்ப்பு எங்களுக்குக் கிட்டியுள்ளது. இப்புதிய சபைக்குத் தேவைப்படும் எத்தகைய உதவியையும் நல்குவதற்கு வேண்டிய ஆளணியையும் வளங்களையுமுடையனவாக இவ்வமைச்சின் கீழியங்கும் பல்வேறு முகமைகள் விளங்குகின்றன. பனை அபிவிருத்திச்சபையை ஆரம்பித்து வைப்பதில் பெரும் ஆர்வம் காட்டப்பட்டுள்ளது. குறிப்பாக வட கீழ் மாகாணங்களிலுள்ள மக்களும் பொதுவாக நாட்டு மக்களும் இதில் பெரும் அக்கறை காட்டியுள்ளனர். எமது சமுதாயத்தின் உரிமை குன்றிய பிரிவினர் சிலருக்குப் பரம்பரையாகவே உயிர்நாடியாக விளங்கி வந்த இத்தொழிலை மறுசீரமைக்கும் பொருட்டு அதனை அபிவிருத்தி செய்து விரிவாக்கும் பணியில் ஈடுபடும் பனை அபிவிருத்திச் சபைக்கு நல்வாழ்த்துக்களை மக்களோடு சேர்ந்து நானும் வழங்குகின்றேன்.

பிராட்மன் வீரக்கோன்,
செயலாளர்,
பெருந்தோட்டத் தொழில் அமைச்சு.

## கற்பக விருட்சத்திற்கு ஒளிமயமான எதிர்காலம்

"தினைத்துணை நன்றி செயினும் பனைதுணையாக் கொள்வார் பயன் தெரிவார்"

ஆதிகாலம் தொட்டே மனிதனின் அடிப்படைத் தேவைகளான தாகம், பசி, உறையுள் போன்றவற்றை ஈடு செய்ய எண்ணற்ற பனம் பொருட்களைப் பனைமரம் அளிப்பதால் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொட்டே இதனைக் 'கற்பக விருட்சம்' என அழைக்கப்படுகின்றது.

லிருந்து வருடம் பூராவும் இடைவிடாது பல பயன்களைப் பெறலாம். அதாவது தைமுதல் ஆனி வரை பதநீரும், ஆவணி வரை நுங்கும், சிக்காயும், ஆவணிமுதல் புரட்டாதிவரை பனம்பழமும், புரட்டாதி முதல் தை, மாசி வரையில் கிழங்கு போன்றவற்றைப் பெறலாம்.

இதுவரை காலமும் மறைந்தும், மறந்தும் இருந்த மூல வளங்களுள் பனைவளமும் ஒன்றாகும். இலங்கையில் ஏழரைக் கோடி பனைமரங்கள் உள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ளது. இப்

**'தாலகாவலர்' கு. கனகராசா**

நமது நாட்டில் வடக்கிலும், கிழக்கிலும் பனைவளம் செறிந்தும, மற்றும் அம்பாந்தோட்டை புத்தளம் போன்ற பிரதேசங்களில் அரிதாகவும் காண படுகின்றது. இப் பனை வளத்திலிருந்து அளவுக்கு மிஞ்சிய பயனைப் பெறலாமென அறிந்த அரசு இதற்கென ஒரு தனி அபிவிருத்திசபையை ஸ்தாபித்துள்ளது மூவேந்தர் காலத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்த பனைமரத்திற்கு மீண்டும் நல்லகாலம் பிறந்திருக்கின்றது. இது குறத்தியர் கூறும் குறியல்ல.

பேராதனைபோன்றகுளிர்ந்த காலநிலையுள்ள பிரதேசங்களிலும், பருத்தித்துறைபோன்ற அதிகூடிய வெப்பநிலை உள்ள பிரதேசங்களிலும் வளரக் கூடிய தன்மை அதன் விசேட சிறப்பியல்பாகும். இப்பனையிடனைமரத்தில் அடிவேர் கொண்டு நுனிக்குருத்தோலை வரை உபயோகிக்கப்படுகின்றது.

பனம்பொருட்களை 801 காரியங்களுக்குப் பயன்படுத்தலாம் என 'தாலவிலாசம் என்னும் சமஸ்கிருத நூல் கூறுகின்றது இதைவிடப்பல ஆங்கில நூல்களும், சஞ்சிகைகளும், பனையின் சிறப்பைப் பற்றி விரிவாக விளக்கியுள்ளன பனையிலிருந்து கிடைக்கப்பெறும் மூலப்பொருட்களைக்கொண்டு அதைக்குடிசைக் கைத்தொழிலாகவும், பாரிய கைத்தொழிலாகவும், உற்பத்தியில் ஈடுபடுத்தி அதனால் கிடைக்கும் வெளியீட்டுப் பொருட்களை உள்ளூர் சந்தைகளில் மாத்திரமன்றி, வெளிநாடுகளில் நல்ல மதிப்பும், வரவேற்கத்தக்க சந்தை வாய்ப்

[6ம் பக்கம் பார்க்க]



பனையை வளர்த்துப் பயனைப் பெறுவோம்.

அன்பளிப்பு: பூ மில்க்வைற், யாழ்ப்பாணம்.

## தொழில் நுட்பக்கல்லூரியின்

# டிப்ளோமா பட்டத்தை வணிகமானி தேர்வுக்கு சமமாக்க உத்தரவு

(கோண்டாவில்)

இலங்கை தொழில் நுட்பக் கல்லூரிகள் வழங்கும் வணிக டிப்ளோமாப் பட்டத்தை இலங்கை வணிகமானித் தேர்வுக்கு சமமானதென பகிரங்க ஆணைக்குழு அங்கீகரித்ததை கல்விச்சேவையின் சகல பகுதிகளுக்கும்தேர்வு செய்வதில் அமுல்படுத்துமாறு கல்வித் திணைக்களத்துக்கு உயர்கல்வியமைச்சின் செயலாளர் கலாநிதி கல்பகே உத்தரவிட்டுள்ளார்.

கொக்குவில் பல்தொழில் நுட்ப மாணவர் தூதுக்குழு ஒன்று உயர் கல்வி அமைச்சின் செயலாளரை திரு. குமாரி பொன்னம்பலம் தலைமையில் சென்று சந்தித்து தமது குறைபாடுகள் குறித்து எடுத்து கூறியதனை அடுத்து இப்பலன் கிட்டியுள்ளது. குழுவில் டிப்ளோமா, கணக்கியல், வர்த்தகப்பயிற்சிநெறிகளை முடித்துக் கொண்டவர்களும் இடம்பெற்றிருந்தனர்.

இவர்களுடன் இக்குழுவில் இலங்கைத் தொழில்நுட்பக் கணக்கியல் வணிகடிப்ளோமா துறைச்சங்கத்தினரும், யாழ்ப்பாணம் தொழில்நுட்ப நிறுவன உயர் தேசிய கணக்கியல் வணிக மாணவர் மன்றத்தின் தலைவர். செயலாளர் ஆகியோரும் இடம்பெற்றிருந்தனர்.

திரு. கல்பகேயிடம் இவர்கள் தமது பயிற்சிநெறிப் பயிற்சிச் பற்றிச் சுட்டிக்காட்டியதனை அடுத்து மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

யாழ்ப்பாண பல்தொழில் நுட்ப நிறுவனத்தில் வணிக டிப்ளோமா மாணவர்களுக்கு அவர்களுக்கானசெயல் முறை பயிற்சி, பயிற்சிநெறி ஆரம்பித்த காலம்முதல் கைநூலில் குறிப்பிட்டு இருந்தும் கொடுக்கப்படவில்லை. இதன் காரணமாக இக்குழுவினர் தமக்கு செயல்முறைப் பயிற்சி தரப்படவில்லையென்பதையும்உயர் கல்வி அமைச்சின் செயலாளருக்குசுட்டிக்காட்டினர். இவ்வாறு இக்குழுவினர் சுட்டிக் காட்டியதன் காரணமாக செயல்முறைப்பயிற்சி உடனடியாகயாழ்ப்பாணம் வணிகடிப்ளோமாபயிற்சி நெறியைமேற் கொள்ளும் மாணவர்களுக்கு கொடுக்கவேண்டும் என்றும் அதற்கான நடவடிக்கையை உடனடியாக எடுக்கும்படியும் தொழில்நுட்பக்கல்விப்பணிப்பாளருக்கும், கலாநிதி ஸ்டான்லி கல்பகேபணித்துள்ளார்

சென்றுசந்தித்த தூதுக்குழு தமது பேட்டி வெற்றிகரமாக அமைந்ததையிட்டு மாணவர்கள் சார்பில் செயலாளருக்கு நன்றி தெரிவித்துக்கொண்டனர். (உ)

# ஈரானில் நாளை பொது வேலைநிறுத்தம்

## எதிர்க்கட்சிகள், மத ஸ்தாபனங்கள் ஏற்பாடு

லண்டன், நவ. 10

ஈரானின் புதிய இராணுவ அரசு ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகள் எடுத்துவருகின்றன அதேசமயத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை தேசிய ரீதியில் ஒரு பொது வேலை நிறுத்தத்தை நடத்த ஈரானின் பிரதான எதிர்க்கட்சிகளும், மதஸ்தாபனங்களும் ஏற்பாடு செய்துள்ளன.

இதேவேளை அரசின் உயர் மட்டத்தில் நிர்வாக சீர்கேடுகளையும் களையும்வகையில் அரசு பலரைக் கைதுசெய்துள்ளது. ஆர்ப்பாட்டக்காரர்களை அடக்குமாறுமாநில கவர்னர்கள் பணிக்கப்பட்டுள்ளனர். (உ)

## எகிப்து-இஸ்ரேல் பேச்சுவார்த்தை

வாஷிங்டன், நவ. 10

வாஷிங்டனில் எகிப்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையே நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகளில் இருநாடுகளின் பிரதிநிதிகளும் சற்றுக் கடுமையான பிடிவாதப்போக்கைக் கடைப்பிடித்ததால் இப்பேச்சுவார்த்தைகள் இவ்வாரத்திற்குள் பூர்த்தியடைவதற்கில்லை என அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

மேற்குஜோர்தான், காஸா பள்ளத்தாக்குப்பகுதி பிரச்னைகளையும் பேச்சுவார்த்தைகளில் சம்பந்தப்படுத்தவேண்டும் என்று எகிப்து கேட்டுக்கொண்டதனையடுத்து இழுபறிநிலை உருவாகியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (உ)

## சீன-தாய்லாந்து வர்த்தகம்

பீக்கிங், நவ. 10

சீன உதவிப் பிரதமர் தமது நான்குநாள் உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக் கொண்டு தாய்லாந்தில் இருந்து பீக்கிங் திரும்பினார். இருநாடுகளினதும் வர்த்தகத் தொடர்புகள் வலுப்பெறும் வகையில்இவ்விஜயம் அமைந்ததாக பீக்கிங் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## இஸ்ரேல் மீதான போரில் முஸ்லிம்கள்

லண்டன், நவ. 10

இஸ்ரேலுக்கு எதிரான புனிதமான போரில் முஸ்லிம்கள் அனைவரும் முழுமையாக ஈடுபடவேண்டும்என்று பாலஸ்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் அரபாத் வேண்டுகோள் விடுத்துள்ளார். மெக்கா யாத்திரிகர் மத்தியில் பேசுகையிலேயே அவர் இவ்வேண்டுகோளை விடுத்தார். (உ)


## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்.

வழக்கு இலக்கம் ஈடு / 147

சேகு முகுதீன் சாகிபு முகம்மது மீருன்மு உஹிதீன்,
இல 34, நாவலர் வீதி, வண்ணார்பண்ணை மேற்கு,
யாழ்ப்பாணம்.

வழக்காளி

எதிராக

1. கவுரியேல் பத்திநாதனும்
2. பெண் அக்கினேஸ் அம்மாவும், இருவரும்

இல. 1, 3-ம் குறுக்குத்தெரு, நாவாந்துறை,
யாழ்ப்பாணம்.

எதிராளிகள்.

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் எனக்குக் கிடைத்த நீதிமன்றக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஆதனத்தை 1978-ம் ஆண்டு மார்கழி மாதம் 19-ம் திகதி (19-12-78) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்த ஆதனத்திற்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

மேற்குறித்த எதிராளிகள் குறித்த வழக்காளிக்கு ரூபா 6,300/-வும் மேலும் 6,300/-க்கு தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்டவட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 9% வீத வட்டியும் வழக்குச்செலவு ரூபா 625-85 சதம் கொடுக்கவேண்டியிருப்பதாலும், மேலும் 19-1-78ல் இவ்வழக்கின் பேரால் எதிராளி ரூபா 500/- வழக்காளிக்குச் செலுத்தியிருப்பதால் இத்தொகை முழுத்தொகையிலிருந்து கழிக்கப்படவேண்டியிருப்பதாலும்,

### குறித்த ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று, வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை ''அகிலடி'' பரப்பு நில இலாச்சம் ஒன்று குளி பன்னிரண்டு (பர நில. இலா. 1 குளி 12) ஆனால் 197ͅ-ம் ஆண்டு ஆடிமாதம் 21-ந் திகதி உத்தரவுபெற்ற உலாந்தா ரி. கந்தையாவால் 4864-ம் இலக்கத்தில் அளந்து வரையப்பெற்ற படத்தில் 1, 2 என்னுமெண்களால் சுட்டப்பட்டுள்ள பாகம் பரப்பு நில இலாச்சம் ஒன்று குளி பதின் மூன்றரை (பர. நில இலா. 1 குளி $13\frac{1}{2}$)ம் இந்தப் பரப்பு நில இலாச்சம் ஒன்று குளி பதின்மூன்றரைக்கும், எல்லை கிழக்கு பாக்கியப்பாவிற்கும் பங்காளருக்குமுரியவாதனம், வடக்கு பாக்கியப்பாவிற்கும், பங்காளருக்கும், இளையதம்பிக்குமுரியவாதனம் மேற்கு கையொழுங்கை முகப்பும் லூசி ஆச்சிக்கும் உரியவாதனம் தெற்கு லூசி ஆச்சிக்கும், சின்னத்தம்பி பெண் சின்னப்பிள்ளைக்குமுரிய வாதனமும் மறுபேருக்குமுரியவாதனமும் இதடங்கலும்.

சி. ஆ. த வடிவேலு, ஜே. பி.
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்,
விலை மதிப்பாளரும்.

''வடிவேல் உதயம்''
காங்கேசன்துறை வீதி,
கோண்டாவில்.
23-10-1978.

0759



## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இலக்கம் ஈடு/964

செல்லப்பா இரத்தினம்,
ஏழாலை வடக்கு, ஏழாலை.

வழக்காளி

எதிராக

செல்லத்துரை தவவிநாயகம்,
இளைப்பாறிய விதானையார், அல்லைப்பிட்டி.

எதிராளி

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் எனக்குக் கிடைத்த நீதிமன்றக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஆதனங்களை 1978 ம் ஆண்டு மார்கழி மாதம் 28-ந் திகதி (28-12-78) வியாழக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தந்த ஆதனங்களுக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

மேற்குறித்த எதிராளிகுறித்தவழக்காளிக்குரூபா 7884/-வும் மேலும்4500/-ற்குவருடமொன்றிற்கு நூற்றுக்கு12வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1975-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 31-ந் திகதியிலிருந்து தீர்வைத்திகதியாகிய 1976-ம் ஆண்டு ஆனி மாதம் 21-ந் திகதி வரையுமான வட்டியும், அதன் பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூறுறுக்கு 5 வீத வட்டியும் வழக்குச்செலவு ரூபா $672\text{-}57\frac{1}{2}$ கொடுக்கவேண்டியிருப்பதாலும்.

### குறித்த ஆதன டாப்பு

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தீவுப் பகுதி அல்லைப்பிட்டி கோவிற்பற்று அல்லைப்பிட்டி இறை ''கட்டக்கன்புலம்'' நிலப்பரப்பு 18 எல்லை கிழக்கு வயித்திலிங்கம் செல்லத்துரைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், வடக்கு ரோட்டு, மேற்கு வயித்தியாம்பிள்ளை அல்பிறற்றுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், தெற்கு ஏரம்பர் அருளம்பலத்துக்குரிய ஆதனம். இவ்வெல்லைப்பட்டி இதடங்கலும்.

2. ஷ்டி அல்லைப்பிட்டி இறை வண்டியன்தோன்றி நெற்பரப்பு $43\frac{1}{4}$ செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு பசுபதி செல்லத்தம்பிக்கும் வயித்திலிங்கம் செல்லத்துரைக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனங்கள், வடக்கு பேதுருப்பிள்ளை வெலிச்சோப்பிள்ளைக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம் மேற்கு வயித்திலிங்கம் செல்லத்துரைக்குரிய ஆதனம், தெற்கு குறித்த வயித்திலிங்கம் செல்லத்துரைக்குரிய ஆதனம். இதடங்கலிற் சொரியலாய் அரைவாசியும் அதற்குச் சேர்ந்தவைகளும்.

3. ஷ்டி அல்லைப்பிட்டி இறை ஆலடிச்சாட்டி நெற்பரப்பு 78. எல்லை கிழக்கு பொன்னம்டலம் நடராசாவுக்கும் பங்காளருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள், வடக்கு ரோட்டு, மேற்கு வாய்க்கால், தெற்கு வயித்திலிங்கம் கனகசபைக்குரிய ஆதனம் இதடங்கலும்.

4. ஷ்டி இறைஒதியடி நெற்பரப்பு79, எல்லை கிழக்கு மயில்வாகனம் கந்தையாவுக்கும் பங்காளருக்கும் வயித்திலிங்கம் சிவசம்புக்கும் பங்காளருக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனங்கள், வடக்கு வயித்திலிங்கம் சிவசம்புக்கும் பங்காளருக்கும் வயித்திலிங்கம் செல்லத்துரைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள், மேற்கு பேதுருப்பிள்ளை வெலிச்சோப்பிள்ளைக்கும் பங்காளருக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனங்கள், தெற்கு சூசைப்பிள்ளை பெண் இராசம்மாவுக்குரிய ஆதனம். இவ்வெல்லைப்படி இதடங்கலிற் சொரியலாய் நெற்பரப்பு இருபத்தாறு குளி நாலும். அதற்குச் சேர்ந்தவைகளும்.

சி. ஆ. த. வடிவேலு ஜே. பி.,
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்
விலைமதிப்பாளரும்.

''வடிவேல் உதயம்''
காங்கேசன்துறை வீதி,
கோண்டாவில்,
27-10-78.

0760



## இலங்கைப் பல்கலைக் கழக வெளிவாரி பட்டப் பரீட்சைகளும் (1979)

பட்டயக் கணக்கறிஞர் (CHARTERED ACCOUNTANCY) பரீட்சைகளும் சட்டக் கல்லூரி பரீட்சைகளும்

First In Laws, LL. B-
G. A. Q, B. A.
First In Com., B. Com.
G. S. Q. B. Sc. (Statistics)
CHARTERED ACCOUNTANCY.

Law College Examination (சட்டத்தரணி இறுதிப் பரீட்சை) தமிழ் மூலம் மேற்படி பரீட்சைகளுக்கான விரிவுரைகள் 7-1-1979 ஆரம்பமாகின்றன.

க. பொ த. (உயர்தரம்) சித்தியடைந்தோரும் வேறு சமமான அல்லது உயர் தராதரமுடையோரும் விண்ணப்பிக்கலாம். தொழில் புரிவோருக்கும் ஏற்ற நேரங்களில் விரிவுரைகள் நடாத்தப்படும்.

கடந்த வருடங்களில் மிகக் கூடுதலான மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

1974ல் — 90% மாணவர்களும்
1975ல் — 60% மாணவர்களும்
1976ல் — 80% மாணவர்களும்
சித்தியடைந்துள்ளனர்.

1977 — பெறுபேறுகள் இன்னும் வெளியாகவில்லை.

ஃ விசேட ஆங்கில வகுப்புகளும் உண்டு.

மாணவர்களுக்கு விண்ணப்பப் படிவங்களும், விபரத்தொகுப்பும் இலவசமாக வழங்கப்படும். கடிதமூலமோ, நேரிலோ உடன் தொடர்பு கொள்க.

பதிவாளர்,
யாழ். சட்டக் கல்வி நிலையம்,
தையல் முத்து மாளிகை,
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

# வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

உரும்பராய் தெற்கு செல்லத்துரை வீதியில் இருக்கும் 3¼ பரப்புக்காணி. வீட்டுடன் விற்பனைக்குண்டு குமாரசண்முகம், செல்லத்துரை வீதி, உரும்பிராய் தெற்கு. 0764

முட்டையிடு கோழிகள் விற்பனைக்குண்டு. நேரில் வரவும். திருமதி இந்திராணி கந்தசாமி, அம்மன் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். 0757

மானிப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு முன் நாலு பரப்பு மூன்று குழி குடியிருக்கக் கூடிய காணி கீழ்க்கண்ட விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும். J. S. சுப்பிரமணியம், No. 35, மூத்தவிநாயகர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 0736

## தேவை

கலர் வேலை தெரிந்த மெசின் மைண்டர் தேவை. நேரில் வரவும். ஆர் எஸ். அச்சகம், 149, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 0758

## கச்சாய் கிராமசபை விளம்பரம்

### கொடிகாமம் மத்தியசந்தை விற்பனை 1979

கச்சாய் கிராமசபை நிர்வாகஸ்தரால் 1979-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ந் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 31-ந் திகதி வரையான காலத்திற்கு கொடிகாமம் சந்தைக் குத்தகைக்கான கேள்விகள் 1978-11-21-ந் திகதி காலை 10-00 மணிவரையும் பதிவுத் தபால் மூலம் ஏற்றுக்கொள்ளப்படும்.

(2) மீளளிக்கக்கூடிய கேள்விப்பிணைப் பணமாக ரூபா 1000/-ம், மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் ரூபா 25/-ம் செலுத்துவதன் மூலம் 1978-11-17ந் திகதி பகல் 11-மணிவரையும் வழங்கப்படும் பத்திரத்தைப்பூர்த்தி செய்து 1978-11-21-ந் திகதி காலை 10-00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

(3) இதுபற்றிய மேலதிக விபரங்களை கிராமசபை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

சு. முருகவேள்,
நிர்வாகஸ்தர்,
கச்சாய் கிராமசபைப்பகுதி.

கச்சாய் கிராமசபை
அலுவலகம்,
கொடிகாமம்.
1978-11-03 0763

## வேலை

புதுடில்லி, நவ. 10
இந்திய தபால் தந்தித் திணைக்களம் அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் மேலும் 14 லட்சம் பேருக்கு வேலை வழங்கவிருக்கிறது. (உ)




# ஒரு பொற்காலம்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி) லாம் என்பதை ஆய்தல்சாலப் பொருந்துவதாகும்.

### பனந்தும்பு

யந்திரசாதனங்களின் உதவியுடன் பனங் கங்குமட்டையில் பெறும் தும்பு வன்மையான துரிகைகள் செய்வதற்குச் சிறந்ததாகும். தென்னக மக்கள் இரண்டுகோடி ரூபா வரை அந்நியச்செலாவணியைச் சம்பாதிக்கின்றனர். அவ்வாறே நாமும் சம்பாதிக்கலாம்.

### குளிர்பானம்

பதநீரிலிருந்து குளிர்பானங்கள் தயாரிக்கலாம். பனஞ்சீனி இதற்கு உகந்தது. தமிழகம் முன்னோடியாக இருவகைப் பானங்களைத் தயாரிக்கிறது. அவ்வண்ணம் நாமும் சத்துள்ள குளிர்பானங்களைத் தயாரிக்கலாம்.

### பன்னவேலை

ஓலையிலிருந்து பல்வேறு பன்னவேலைகளை ஆரம்பிக்கலாம். தொழிலாளர்க்குச் சிறந்த குடிசைக்கைத்தொழிலாக இது அமையும். வண்ண வண்ணப்பொருள்களை ஆக்கும் பெரும் ஆலைகள் செய்யலாம். இதற்கு வாய்ப்பான இடங்கள் வடபகுதியில் பல உள.

### கள்

போத்தல்களில் அடைத்தலும் மிதமிஞ்சிய கள்ளை சேகரித்தலும் சபை செய்யக் கூடியனவாகும். கள்ளினால் அன்றாடம் பெரும் வருமானம் சபையின் வருவாயின் கணிசமான பகுதியை வகிக்கும். நுங்கிலிருந்தும் கள் புதிய ஆய்வின்படி தயாரிக்கமுடியும்.

### உணவுப் பண்டங்கள்

ஜாம், பனுட்டில் சொக்கலேற் போன்ற உணவுப் பண்டங்கள் என்பனவும் தயாரிக்கலாம்.

### மரங்கள்

இவை கூரைமரங்களாகவும், சாளரங்கள் செய்யவும் பயன்படுத்தலாம். அவற்றின் நீண்ட ஆயுள்கருதி மக்களிடை நவீனமுறையில் காலதர்கள் ஆக்கி விற்பனவு செய்யலாம்.

### பனஞ்சோலைகள்

பனஞ்சோலைகளை அழிக்காது பாதுகாக்கவேண்டும். மேலும் விஞ்ஞானரீதியில் பனஞ்சோலைகளை அமைத்தல்வேண்டும். அவற்றின் பருவங்களை நாலாக வகுக்கலாம். அந் நால்வகை நிலையிலும் பெறும் பயன்களின் உயர்நிலையை அடையவேண்டும்.

இன்னோரன்ன துறைகளில் சபை அயராது முயன்று புதியவேகத்தில் எமக்குக் கிடைத்த இச் சபையைச் சிறப்புறச் செய்யவேண்டும். பெரிய விபத்துக்களையும் இன்னல்களையும் அனுபவித்த சீவல் தொழிலாள மக்கள் இச்சபையால் உயர்ந்த பயனை அடையும் உரித்துடையராவர். உள்ளத்தின் அடிநாதமாக எழும் உயரிய பாங்குடன் அன்னாரின் நலன் பேணி ஆவனசெய்வதாக.

## மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

### ஏல விற்பனை அறிவித்தல்

யாழ்ப்பாணம், தேவாலய வீதி, 2ஆம் குறுக்கு வீதிச் சந்திக்கருகில் உள்ள மகோக்கனிமரம் ஒன்று 13-11-78ஆம் திகதி மு. ப. 9-00 மணியளவில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

சித்திபெற்ற கேள்விக்காரர் பணத்தை உடனடியாகச் செலுத்தி மரத்தையும் உடனடியாகஅப்புறப்படுத்தவேண்டும்.

க. சிவஞானம்
விசேட ஆணையாளர்,
யாழ். மாநகராட்சிமன்றம்.
7-11-78. 0747

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்
காலஞ்சென்ற நீர்வேலியைச் சேர்ந்த ஞானசேகரம் அப்புத்துரை என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில் மரணமெய்தியவர்

அப்புத்துரை கைம்பெண் ஞானமணி, நீர்வேலி தெற்கு, நீர்வேலி.
மனுதாரர்

மரணசாதன)
நியாயாதிக்க) இல. 3375

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட மரணமெய்தியவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 24-ந் நாளன்று முற்பகல் 10 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி
பதிவாளர்.

தயாரித்தவர்:

சு. பரமராஜா,
மனுதாரின் சட்டத்தரணி.
0737

## கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி
### தொழினுட்பப் பிரிவு

ஒட்டுதல் பொருத்துதல் வேலைகளும், இரும்பு கேற்றில், கம்பிகளாலான கதிரைகள் (Rocket Chairs) ஸ்ரூல், முதலியன ஒடருக்குச் செய்துகொடுக்கப்படும். சகாய விலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.
உடன் தொடர்பு கொள்க.

அதிபர்

0761

## கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி
### மனையியற் பகுதி

க. பொ. த. உயர்தர வகுப்பில் இன்னும் சில வெற்றிடங்கள் உள்ளன. தகைமையுடையோர் உடனே விண்ணப்பிக்கவும்.

அதிபர்.

0763

## மாலைதீவின் புதிய ஜனாதிபதி

லண்டன், நவ. 10
மாலைதீவின் புதிய ஜனாதிபதியாக அப்துல்கையூம் உத்தியோகபூர்வமாகப் பதவியேற்றுள்ளார்.

இவர் முன்னர் போக்குவரத்து அமைச்சராகப் பதவி வகித்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)


நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
ஜெயசங்கர் - லக்ஷ்மி
பெண் தெய்வம்

சில தினங்கள் மட்டும்
வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
எம். ஜி. ஆர்-விஜயா
நல்லநேரம்

Rio (Jaffna)
Daily 4 Shows
Sean Connery
RANSOM

கடைசி வாரம் — கடைசி 3 தினங்கள்
ராஜா (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-30, 9-45
ஃ மரிக்கார் ராமதாஸ்
ஃ ஹெலன்குமாரி
மற்றும்பலர் நடித்த சிறந்த ஹாஸ்ய திரைவிருந்து!
ஏமாளிகள்

தினசரி 4 காட்சிகள்
ராணி [யாழ். நகர்]
சிவாஜி-மஞ்சுளா நடித்த
உத்தமன் (ஈஸ்ட்மன் கலர்)

REGAL (Jaffna)
NOW SHOWING
Daily at, 4-30, 7-00&9-30 p.m,
Sidney James, Kenneth Williams
in
'CARRY ON MATRON'
(Color)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30 & 9-45
எம். ஜி. ஆர். --- சரோஜாதேவி நடித்த
திருடாதே [புதிய பிரதி]

சாந்தி (யாழ். நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
பேசும் தெய்வம் (புதிய பிரதி)
Showing Soon "Blood Money"

வின்ஸர் [யாழ்ப்பாணம்]
தினசரி 3 காட்சிகள் போன்: 466
3-வது ஜனத்திரள் வாரம்
ஃ சிவராம் ஃ சந்திரகலா ஃ தனரத்தினம் நடித்த
அநுராகம்

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
ஜெய்சங்கர், சுஜாதா நடித்த
நீ ஒரு மகராணி
(புதியபிரதி)

லிடோ (யாழ். நகர்)
போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
எங்கள் தங்க ராஜா

நீண்ட நாட்கள் புதிய படம் இல்லையே என்று ஏங்கிய ரசிகர்களுக்கு 12-11-78 முதல் மாபெரும் வெளியீடு!
தினசரி 4 காட்சிகள்
மனோகரா யாழ்நகர்
: முத்துராமன் : ஜெயலலிதா
: எஸ். வி. ராகவன் : ஸ்ரீகாந்த்
சுகுமாரி, சச்சு, சுருளிராஜன்
மற்றும் பலர் நடித்த
ஸ்ரீ உமாசித்ர கம்பைன்ஸ்
கணவன் மனைவி
இன்று மட்டும் தனிப்பிறவி

## தழைத்திடும்பனையே வாழி!

- கவிஞர் அரியாலையூர் வே. ஐயாத்துரை -

கற்பக தருவே யென்று
காசினி மாந்தர் போற்ற
நற்பயன் நல்கி நாட்டில்
நானென நிமிர்ந்து நிற்கும்
அற்புதப் பனையே யுன்றன்
அதிபயன் மேலும் வேண்டிப்
பொற்புயர் திட்டம் தீட்டிப்
போற்றிடும் புதுமை காண்பாய்!

காய்கனி கிழங்கு கள்ளு
கருப்பைநீர் இனிப்புக் கட்டி
பாய்பறி களகு பெட்டி
பாரிய கூடை குட்டான்
வேய்விரி ஓலை பாய்ச்சு
வேண்டிய பொருள்கட் கெல்லாம்
தாய்நிறைத் தகைமை வாய்ந்தே
தழைத்திடும் பனையே வாழி!

உறுப்புகள் அனைத்தும் நல்ல
உவப்பென உணர்ந்தே மக்கள்
கறுப்பியென் றுன்மேற் காதல்
கண்ணினை வைத்தார் காக்க
வெறுப்பிலா தேழை மக்கள்
விரும்பியே போற்றித் தங்கள்
சிறுப்பினை போக்கி வந்த
செம்மைபோல் சிறந்தே வாழி!

# திருமுறை விழா

## இன்றைய நிகழ்ச்சிகள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு இந்துமகளிர் மன்ற திருமுறை விழாவின் இன்றைய - இரண்டாம்நாள் நிகழ்ச்சிகள் வருமாறு:-

காலை நிகழ்ச்சிகள் இடம்: மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை மண்டபம். தலைமை: ஆசிரியர் கலாசாலை அதிபர் திரு. தருமலிங்கம்.

திருமுறை ஓதுதல் - பண்ணிசை இளவல் திரு. ஞா. பாலசுப்பிரமணியம். சொற்பொழிவுகள்: திரு. ஏ. பாக்கியமூர்த்தி, திருமதி பங்கேஸ்வரி சங்கரப்பிள்ளை. பட்டிமன்றம்; அப்பர்சுவாமிகள் "ஒரு சமயப் புரட்சியாளர், ஒரு சமூகப் புரட்சியாளர்" வட்டாரக் கல்வியதிகாரி திரு. ம. சிவநேசராசா தலைமையில் நடைபெறும்.

மாலை நிகழ்ச்சிகள் மட்டக்களப்பு மாநகரசபை மண்டபத்தில் சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறும்.

திருமுறை ஓதுதலைத் தொடர்ந்து கொழும்பு இந்து சமய விவகார ஆலோசனைச் சபைச் செயலாளர் திரு. மு. சிவராசா, மொறக்கட்டாஞ்சேனை இ. கி. ச. வித்தியாலய அதிபர் செல்வி கண்மணி அருணாசலம் ஆகியோர் சிறப்புரை ஆற்றுவரார்கள். இன்னிசை விரிவுரை; சைவப் புலவர் பொன். தெய்வேந்திரம்.

இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு இந்துசமய விருத்திச் சங்கத்தின் "திருவருட் செல்வர்" திருமுறை நாடகம் நடைபெறும். நாளை காலையும் மாலையும் கடைசிநாள் நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

### கற்பக...

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

புக்களும் உள்ளன. இதுஎமது தேசிய வருமானத்தைப் பெருக்கவல்லது. 1968-69ம் ஆண்டுகளில் ஏறக்குறைய 20 கோடிரூபா பெறுமதியான பனம் தும்பை இந்தியா அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளது. ஆகவே நாம் இனியாவது பனை அபிவிருத்தியில் ஈடுபட்டு வெளிநாட்டுச் செலாவணியை சம்பாதிப்போமாக.

அரசாங்கம் ஸ்தாபித்துள்ள பனை அபிவிருத்திச்சபைமூலம் பலகைத்தொழில் நிலையங்களை அமைத்து அதன்மூலம் வேலையில்லாத்திண்டாட்டத்தைக் குறைக்கலாம். இதற்கு நாம் எம்மாலியன்ற முழு உதவியையும் செய்வோம். பனை அபிவிருத்தியில் ஈடுபடுவது நாம் எமது இனத்திற்குச் செய்யும் தொண்டாகும்.

'வளர்க பனை அபிவிருத்திச் சபை'
வாழ்க கற்பக விருட்சம்.


## மரண அறிவித்தல்

### விஞசித்தம்பி நாகம்மா

புங்குடுதீவு

இவர் காலஞ்சென்ற விஞசித்தம்பி அவர்களின் அன்பு மனைவியும் N. V. R. M. & CO கொழும்பு, சிதுவை ஸ்ரோர்ஸ், சீதுவை, பெயலியகொடை அரிசி ஆலை, வத்தளை, V. R. M. & CO யாழ்ப்பாணம் ஆகிய நிறுவனங்களின் உரிமையாளர் வி. இராமநாதன், வி. சுப்பிரமணியம், அன்னப்பிள்ளை ஆகியோரின் அன்புத் தாயாரும், வே. இளையதம்பி மனோன்மணி கபே மன்னார், இ. புஸ்பமணி, சு. மீனாட்சி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவர்.

அன்னாரின் பூதவுடல் 11-11-78 சனிக்கிழமை காலை 10 மணிக்கு 16, மணிக்கூட்டு ஒழுங்கை, யாழ்ப்பாணத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஆகியோர் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

0766 தகவல்: வி. இராமநாதன்.


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978ம் ஆண்டு நவம்பர் மாதம் 11ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No: 49, Telegram Eelanaadu, Telephone: 889, Registered as a Newspaper in SriLanka.

### ஜி. ஜி. பிறந்திலரேல் வெளி உலகுக்கு

# தமிழினத்தின் தனித்துவம் மிக்க குரல் கேட்டிராது

(யாழ்ப்பாணம்)

"அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் பிறந்திலரேல், ஈழத் தமிழினத்தின் தனித்துவமான குரல், வெளி உலகத்திற்குக் கேட்டிருக்காது" என தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ரி. சங்கரப்பிள்ளை, அமரர் ஜி. ஜி. யின் பிறந்ததின விழாவில் பேசுகையில் கூறினார்.

யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸின் ஆதரவுடன் ஜி. ஜி. ஞாபகார்த்த குழு சார்பில் நடைபெற்ற அமரர் ஜி. ஜி. யின் 77-வது பிறந்ததின விழாவில், திரு. ரி. சங்கரப்பிள்ளை மேலும் கூறியதாவது:-

சக்கரவர்த்தி காலத்தில் சாலிவாகனன் ஒரு சகாப்தம். விக்கிரமாதித்தன் ஒரு சகாப்தம். சமயத்துறையில், ஆறுமுகநாவலர் ஒரு சகாப்தம் அரசியல்துறையில், சேர் பொன் இராமநாதன் ஒரு சகாப்தம். அதன்பின், இந்நாட்டின் சுயராஜ்யகாலத்தில் அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் சகாப்தம் ஒன்றுண்டு. அமரர் ஜி. ஜி. தோன்றியிராவிட்டால் தமிழினத்தைப்பற்றிய வாதாட்டங்கள் இடம்பெற்றிருக்காது.

ஜி. ஜி யின் கொள்கைத் திட்டங்களைவிட தமிழினத்திற்கு உகந்தது வேறு ஒன்றுமில்லை என்பதை இன்று தமிழர் நிலைமை எடுத்துக்காட்டுகிறது.,

இன்று தமிழர் சார்பாக பாராளுமன்றம் சென்றுள்ள தலைவர்களின் தடுமாற்றங்களிலிருந்து அமரர் ஜி. ஜி. யின் பாதையே 'சரியானதென்று புலப்படுகின்றது, அமரரின் கொள்கைத் திட்டப்படி இந்தத் தலைவர்கள், சென்றிருந்தால் இன்று தமிழர் நிலைமிக உன்னதமாக இருந்திருக்கும்.

தமிழ் மக்கள் அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் ஞாபகத்தை நிலைநாட்ட வேண்டுமானால், அவர் உருவாக்கிய தமிழ் காங்கிரசை முன்னைய நிலைக்கு கொண்டுவந்து அவரின் கொள்கை மூலம் தமிழினத்தை வழிநடத்தி சுபீட்சத்தை காணவேண்டும்.

### ஜி. ஜி.க்கு சிலை

இருப்பினும் அவரின் நினைவாக, யாழ். நகரில் சிலையொன்றை நிறுவவும், தர்மஸ்தாபனம் ஒன்றை அமைக்கவும், மணிமண்டபம் ஒன்றை ஸ்தாபிக்கவும் தமிழ் மக்கள் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

சட்டத்தரணி என். ரி. சிவஞானம் பேசுகையில் அமரர் ஜி. ஜி. தமது வாழ்நாள் முழுவதும், தமிழினத்திற்கு சேவை செய்தாரென்றும், சுவவினம் முற்றிருந்த நிலையிலும் தமிழ் தலைவர்களுக்காக நீதிமன்றத்தில் வாதாடி வெற்றி பெற்றாரென்றும் கூறினார். (க-இ)

### இந்திரா...

1-ம் பக்கத்தொடர்ச்சி

டம் மேற்கொள்ளப்பட்டதாகவும், இந்திராவின் ஆதரவாளர்களுக்குக் கொடுப்பதற்காக 'டிரக்' வண்டி ஒன்றில் பணம் எடுத்துச் செல்லப்பட்டதாகவும் குற்றம் சுமத்தப்பட்டே தேர்தல் 'ஆட்சேபனை வழக்குத் தாக்கல் செய்யப்பட உள்ளது என்றும் திரு. பெர்னாண்டஸ் தெரிவித்தார். (இ)

### தந்தியின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாலசிங்கம் என்பவர் சுமார் 5 மைல் தொலைவிலிருக்கும் தாவடி பகுத்தவன் புலத்திலிருக்கும் எஸ். பொன்னுத்துரைக்கு அனுப்பிய அவசரத் தந்தியே இன்னும் விலாசதாரிடம் கிடைக்கவில்லையாம்.

இதுகுறித்து மேலிடத்துக்குப் புகார் செய்யப்பட்டுள்ளது. (இ)

### ஜீப்பை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வருகிறது.

மாங்குளம் பொலிஸார் இத் துணிகரக் கொள்ளை பற்றித் தொடர்ந்து தீவிர புலன்விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (உ)

### நீதிமன்ற...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லைசென்ஸ் புதுப்பிக்கப்படவில்லையென்றும் அவர் வருடத்தில் அரைவாசி நாட்கள் சிறையிலிருந்தபடியால் புதுப்பிக்கவில்லையென்றும் சட்டத்தரணி ஜி. ஜி. பொன்னம்பலம் கூறினார்.

சந்தேகநபரான மகாலிங்கத்தின் துவக்கு அவருடையதல்லவென்றும் அது அவருடன் கூட்டாக விவசாயம் செய்யும் புங்குடுதீவைச் சேர்ந்த விஸ்வலிங்கத்தின் துவககென்றும், பொலிசார் மகாலிங்கத்திடம் துவக்கைக் கைப்பற்றவில்லையென்றும் மகாலிங்கத்தை ஒரு வீட்டிற்கு கூட்டிசென்று அங்குள்ள சிறுபிள்ளையிடம் சொல்லி பொலிசார் துவக்கை எடுத்ததாகவும் திரு. பொன்னம்பலம் தெரிவித்தார்.

சந்தேகநபர்களையும் பிணையில் விடுதலைசெய்யுமாறு மற்றும் சட்டத்தரணிகளும் கோரினார்கள்.

நீதவான சந்தேகநபர்களான ராசரத்தினம், மகாலிங்கம் ஆகியோரை 1000 ரூபா உறுதிப் பிணையில் விடுதலைசெய்து மற்றும் 4 பேரையும் றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டு விசாரணையை இம்மாதம் 25ம் திகதிக்கு ஒத்திவைத்தார். (க)

## இன்றைய கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக்கூட்டணியின் வாராந்தரக்கருத்தரங்கு இன்றுமாலை கூட்டணிப்பணிமனையில் நடைபெறவுள்ளது கருத்தரங்கிற்கு முன்னாள் மாநகரசபைத் தலைவர் டாக்டர் திரு. அ. செ. தர்மலிங்கம் தலைதாங்குவார்.

"அமிர் மேற்கொண்டுள்ள உலகப்பயணம் தமிழ்ஈழக் கோரிக்கை பற்றிய தாக்கம் என்னும் பொருள்பற்றி கூட்டணிப்பிரமுகர்கள் உரையாற்றுவர். பேராசிரியர் வில்சன் ஆற்றிய "தமிழ் ஈழப் பொருளாதாரம்" பற்றிய பேச்சும் ஒலிப்பதிவு செய்யப்படவுள்ளது. (கெ)

## சிறந்த மரியாயின் சேனையாளராக திகழ்ந்தவர்

சஞ். யுவானியார் கோவில் மரியாயின் சேனை என்றதுமே பலருக்கு ஞாபகத்தில் வரும் பெயர் முத்தையா அண்ணன் என்பதாகும். அவ்வளவு தூரம் சிறந்த மரியாயின் சேனையாளராக திகழ்ந்து அமரரான திரு. பாவிலுமுத்தையா செபஸ்தியாம் பிள்ளையின் முப்பத்தோராவது நாள் இன்றாகும். எவருக்குமே மனத்துன்பம் வராமல் நடக்கும் நல்லபண்பும் பிறர்க்கு உதவும் உயரிய இறையன்பும் நிறைந்த அன்னாரின் வாழ்க்கை நல்லதோர் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

"இப்பிறந்தார் கண்ணல்லதில்லை இயல்பாகச் செப்பமும் நாணமும் ஒருங்கு" என்றான் வள்ளுவன் அக்குறளின் நடைமுறை சாட்சியாக செப்பமும் நாணமும் வாய்ந்த வளமானவாழ்வு வாழ்ந்தவர் அவர் அன்னாரின் ஆன்மா இழப்பாற்றிக்காக இன்று சஞ்யுவானியார் ஆலயத்தில் திருப்பலிபூசை ஒப்புக்கொடுக்கப்படுகிறது.

—பற்றிமாகரன்—

## இறுதிப் போட்டிக்கு மகாஜனா தெரிவு

(யாழ், விளையாட்டு நிருபர்)

யாழ். பாடசாலை விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நேற்றைய அரை இறுதி ஆட்டத்தில் மகாஜனக் கல்லூரி 4—2 கோல்களால் யாழ். இந்துக் கல்லூரியை வெற்றியீட்டி இறுதியாட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இடைவேளையின் முன்னர் மகாஜனக் கல்லூரியினர் சிறப்பாக விளையாடி 3-0 கோல்களால் முன்னணியில் நின்றனர்.

இடைவேளையின் பின்னர் யாழ் இந்துக் கல்லூரி மிக வேகமாக விளையாடி அடுத்தடுத்து 2 கோல்களைப் போட்டனர். இச்கட்டத்தில் மகாஜனா மேலும் ஒரு கோலைப் போட்டது.

எண்ணாயிரத்துக்கும் மேற்பட்ட ரசிகர்களின் மத்தியில் நடைபெற்ற இப் போட்டி ஆரம்பமுதல் இறுதிவரை மிக விறுவிறுப்பாகவே நடைபெற்றது.

திரு. வி. கணேசலிங்கம் நடுவராகக் கடமையாற்றினார்.

(கோண்டாவில்)

கொக்குவில் கிராமச் சங்கத்தினால் அண்மையில் நூலகத்திற்கென கட்டப்பட்ட கட்டடத்திற்குள் மழை காலத்தில் நீர் நிறைந்து காணப்படுகின்றது.

இதேவேளை இந்நூலகத்தில் ஆசனத்தட்டுப்பாடு நிலவுவதாகவும் சஞ்சிகைகள் தாமதமாகவே வருகின்றன என்றும் கவலை தெரிவிக்கப்படுகிறது.

### ஜனாதிபதி...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

யிருக்கும் என்றே அரசு கருதியது

எனினும் என்ன நோக்கத்துக்காக இக்கமிஷன் நியமிக்கப்பட்டதோ அக்குறிக்கோளை நிறைவேற்றியே தீருவது என்று அரசு தீர்மானித்துள்ளது. எனவே விரைவில் உரிய முறையில் சட்டம் இயற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

### 5 மனுக்களில் 4 நிராகரிப்பு

திருமதி பண்டாரநாயக்கா ஆணைக்குழுவுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருந்த ஐந்து மனுக்களில் ஒரு மனுவை மட்டுமே நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு மிகுதி 4 மனுக்களையும் நிராகரித்தது என்பதையும் பிரதமர் சபையில் சுட்டிக்காட்டினார். (இ)